[*1996 பிப்ரவரி 28*

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்மை புரட்சி கண்டுள்ள நம்முடைய தங்கத் தலைவியின் தன்னிகரற்ற ஆட்சியில், பெருகிவரும் மக்கட்தொகையைக் கணக்கில் கொண்டும், மக்களுடைய தேவையைக் கருத்தில்கொண்டும், மகளிரால் இயக்கப்படும் சங்ககிரியைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் பால் பூத்துக்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது *450* லிட்டரிலேயிருந்து *1000* லிட்டர் ஒரு நாளைக்குத் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தத் தேவையை அதிகரித்து, தற்போது ஒரு நாளைக்கு *5000* லிட்டர் தேவைப்படும் என்ற நிலையில் அந்த பால் பூத்துக்களை அமைக்கும் செயற்குறிப்பை இவ்வாண்டே உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *153*, டாக்டர் எஸ்.சுந்தரராஜ், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

153—

படச்சுருள் வினியோகம்

*** 35138—டாக்டர் எஸ்.சுந்தரராஜ் :**

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உற்பத்தியாகும் படச்சுருள் எக்ஸ்ரே பிலிம் வகைகளை மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் இராணுவம் ஆகியன பாண்டிச்சேரியிலிருந்து வினியோகிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வாங்குகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், இதனால் தமிழக அரசிற்கு வரி இழப்பு ஏற்படுகிறதா ?

1996 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்கு வரி இழப்பு ஏற்படுகின்ற வகையில் இதுபோன்று உற்பத்தி செய்கின்ற இடத்தில் விற்பனை செய்யாமல் வரி ஏய்ப்பு செய்வதற்காக பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று அங்கே விற்பனை செய்வதைத் தடுக்கும்பொருட்டு தமிழக அரசே அந்தந்த பொருட்கள் உற்பத்தி செய்கின்ற இடத்திலேயே வரி விதித்து, இந்த வரி ஏய்ப்பு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.45

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்படைப்பு விற்பனைக்கு வரி விலக்கு மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் 1952 ஆம் ஆண்டிலேயே வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வினாவில் கண்டிருக்கின்ற ஒப்படைப்பு விற்பனை சம்பந்தப்பட்டது உதகமண்டலத்தில் இருக்கின்ற இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் உற்பத்தி செய்கின்ற போட்டோ சுருள்களை மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள், குறிப்பாக இராணுவத் துறை உட்பட, மருத்துவத் துறை உட்பட உதகமண்டலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற படச் சுருள்களை பாண்டிச்சேரியிலிருந்து எங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொள்கின்ற அடிப்படையில் வரி ஏய்ப்பு நடைபெறுகின்றது என்பதுதான் இந்தக் கேள்வி. அந்த வகையில் நடைபெறுகின்றது. நுகர்வோர்கள் தனி நபராகவோ, தனி வணிகராகவோ இருந்தால் இது போன்ற வரி சலுகைகளை அடைவதற்கு ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளை இன்னொரு இடத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கலாம். ஆனால் ஒரு மாநில அரசினுடைய வருவாய் இழப்பு ஏற்படுகின்ற வகையில் மத்திய அரசினுடைய துறைகள் இவ்வாறு செயல்படுவது வருந்தத்தக்கது. இதற்கு இந்த தமிழக அரசினுடைய வரி இழப்பை ஈடுசெய்கின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுமேயானால், அதை மத்திய அரசாங்கம்தான் கொண்டு வர வேண்டும். இதற்கு 1982-லேயே அரசியல் சாசன சட்டம் பாராளுமன்றத்திலே திருத்தப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டமுன்வடிவு மத்திய அரசால் கொண்டு வரப்படவில்லை, கொண்டு வரப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1996 பிப்ரவரி 28

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்கு இதுபோல் எந்தெந்த வகையில் வரி இழப்பு ஏற்படுகின்றது. இவைகளையெல்லாம் நிரந்தரமாக தீர்க்கும் பொருட்டு தமிழக அரசு மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி இதுபோன்ற சட்டத்திருத்தத்தை அமல்படுத்துகின்ற வகையில் மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துமா அல்லது உடனே அவைகளுக்கெல்லாம் ஆக்கப்பூர்வமான செயல்வடிவம் கொடுப்பதற்கு தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசை பொறுத்தமட்டில் ஒப்படைப்பு விற்பனைக்கு வரி விதிக்கின்ற சட்டம் கொண்டு வருகின்ற அதிகாரம் நம்மிடம் இல்லை என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறேன். மத்திய அரசைப் பொறுத்த வரையில் கொள்கை அளவில் ஒத்துக்கொண்ட காரணத்தினால்தான் அரசியல் சாசன சட்டத்திருத்தம் 1982-ல் திருத்தப்பட்டது. மத்திய அரசாங்கம் தங்களுடைய கடமையை விரைவாக செய்ய வேண்டுமென்று மாநில அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. மாண்புமிகு நமது நிதியமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பில் வரி சீர்திருத்த திட்டங்களுக்காக ஆய்வுகள் நடத்தப்படுகின்ற போதெல்லாம் இந்த ஒப்படைப்பு வரி விதிப்புச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றார்கள். இதற்கு மாநில அரசின் சார்பில் தொடர்ந்து எழுத்து வடிவில், கோப்பு வடிவில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்-ல் மட்டும் இந்த வகையில் நமக்கு வரி இழப்பு ஏற்படவில்லை. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு பொருள்கள் வேறு மாநிலத்தில் எடுத்துச் சென்று அங்கே விற்பனை செய்யப்படுகிறது என்ற முறையில் எந்தெந்த பொருள்களில் எல்லாம் இந்த நிகழ்வுகள் ஏற்படுகிறதோ அந்த வகைகளில் எல்லாம் நமக்கு வரி இழப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, தமிழகத்தில் நூற்பாலைகள் நூற்றுக்கணக்கானவை ஆண்டுதோறும் புதியதாக தோன்றிக் கொண்டு இருக்கிறது. அந்த நூற்பாலைகள் எல்லாம் தாங்கள் உற்பத்தி செய்யும் நூல்களை பிற மாநிலங்களில் எடுத்துச் சென்று அங்கு வியாபாரம் செய்வதாக வரி ஏய்ப்பு செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் நமக்கு இழப்பு ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வருமானத்திலே அமைச்சர் அவர்கள் இந்துஸ்தான்

1996 பிப்ரவரி 28]

போட்டோ பிலிம்ஸ் என்ற கம்பெனியால் எந்த இழப்பும் இல்லை என்று சொன்னார்கள். சமீபத்திலே அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இதே இந்துஸ்தான் கம்பெனியின் சரக்குகள் பல ஆண்டுகளாக அதை துறைமுகத்திலிருந்தே வெளியே கொண்டு வராமல் இருந்து அதை எரித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி எரித்துவிட்ட சரக்குகள் என்பதில் அது உண்மையாக அதை வெளியிலே மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்தி தமிழ்நாட்டுக்கு உள்ளே கொண்டு வந்து பேக்டரியிலே தரமான உற்பத்தியை உண்டாக்கி அதை செய்திருப்பார்களேயானால் அந்த வரி இழப்பு ஏற்படாமல் இருந்திருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு நமது தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதற்கான அமைச்சரின் பதிலை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் எரித்தது இவருக்கு எப்படித் தெரியும் ? பில் போட்டு விற்றிருப்பார்களேயானால் அதற்கு வரி போடுவதுதான் அமைச்சருக்குத் தெரியும். இதெல்லாம் அவர்கள் துறையைச் சார்ந்தது. அடுத்த முறை நாடாளுமன்றத்திற்குச் சென்று அங்கு போய் இதெல்லாம் கேளுங்கள். தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுப்பினால் அவர் கண்டிப்பாகப் போவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போய்விடுவாரா ? பரவாயில்லை. அந்த நம்பிக்கை உங்களுக்கு வந்துவிட்டது. நேற்று நாவலர் அவர்கள் சொல்லும்போது இருந்த நம்பிக்கையோடு இந்த நம்பிக்கையும் கூடுதலாக வந்துவிட்டது.

வினா என் 154, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

154—

திரைப்படங்களுக்கு வரி விலக்கு

*** *48761*—திருமதி கவிநிலவு தர்மராஜ் :**

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளித்து ஊக்குவிக்க அரசு முன்வருமா ?